**அ.வ.எண். 300/2023**

**வா.சா.1 : முத்தையா**
**தேதி : 09.03.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

மாரிமுத்துபிள்ளையும், அவரது மகன்கள் இருவரும் 25.07.1950 தேதியில் ஒரு பாகப்பிரிவினை பதிவு ஆவணம் எண்.2244/1950 மேலக்கரூர் சார்பதிவகம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மாரிமுத்துபிள்ளை உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்துக்களை பொறுத்து அவர்கள் மகன்கள் இருவரும் பதிவு செய்யப்பட்ட பாகசாசனத்தின் படி அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். மாரிமுத்துபிள்ளை உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்களை விற்றுள்ளார் என்று விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரியாது. மாரிமுத்துபிள்ளை இறந்தபிறகு அவரது மகன்கள் இருவரும் சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்று சொன்னால் விற்கவில்லை. 13.04.1994 தேதியில் மாரிமுத்துபிள்ளையின் இரு மகன்களும் இளங்கோ என்பவருக்கு சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்று சொன்னால் தெரியவில்லை. ரெட்டியார்பிள்ளை பக்கத்து பங்குகாரர். மாரிமுத்துபிள்ளை அவர் அனுபவித்து வந்த சொத்துக்களை ரெட்டியார்பிள்ளைக்கு சிலவற்றை விற்றுள்ளார் என்று சொன்னால் விற்கவில்லை. மாரிமுத்துபிள்ளை அவர் சொத்துக்களை ரெட்டியார்பிள்ளைக்கு விற்று பின்னர் அந்த சொத்துக்களை மாரிமுத்துபிள்ளையின் மனைவி பழனியம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியவில்லை. மாரிமுத்துபிள்ளையின் மனைவி பழனியம்மாள் கிரையம் வாங்கிய சொத்துக்களை அவரது மகன்களுக்கு 21.08.1981–ல் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. வா.சா.1 பாக்கியத்தை விசாரித்த பிறகு அவரிடம் குறுக்கு விசாரணை பற்றிய விவரங்களை கேட்டு தெரிந்துகொண்டேன். பாக்கியத்தை விசாரணை செய்த

பிறகு மாரியப்பபிள்ளை குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை, செட்டில்மெண்ட், கிரையம் குறித்த ஆவணங்களை நீங்கள் விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். ஆகையால் மேற்சொன்ன அனைத்து ஆவணங்கள் குறித்து உங்களுக்கு தெரியும் என்றும் அவைகளை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1995 ஆம் ஆண்டில் மாரிமுத்துபிள்ளையின் மனைவி மற்றும் மகள், இரண்டு மகன்களுக்குள்ளும் ஒரு குடும்ப ஏற்பாடு செய்துகொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. மேற்சொன்ன குடும்ப ஏற்பாட்டில் மாரிமுத்து பிள்ளையின் அசையா சொத்துக்கள் அனைத்தும் மாரிமுத்துவின் மகன் அரியதம்பிக்கு ஒதுக்கப்பட்டும், உங்கள் தாயருக்கும், மாரிமுத்துபிள்ளையின் மனைவிக்கும் தலா ரூ.25,000/- பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. மாரிமுத்துபிள்ளை அவர் அனுபவித்து வந்த சொத்துக்களை 3ம் தரப்பினருக்கு விற்றுள்ளார் என்று சொன்னால் ஒன்று மட்டும் தான் ஒரு கம்பெனிக்கு விற்றுள்ளார். கந்தசாமி திருமணம் ஆகமால் இருந்து வந்ததால் அவர் அவரது இறுதிகாலம் வரை அரியதம்பியுடன் தான் இருந்து வந்தார் என்று சொன்னால் எங்களுடன் தான் இருந்தார். உங்களுடன் கந்தசாமி இருந்துவந்தாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 2004-ல் அரியதம்பிக்கும், கந்தசாமிக்கும் ஒரு குடும்ப ஏற்பாடு கந்தசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அரியதம்பி அடைந்து கொள்ளவேண்டியது என்று அவர்களுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்டு அரியதம்பி சொத்துக்களை அடைந்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நீங்களோ, உங்கள் தாயாரோ தாவா சொத்தில் இதுநாள் வரை அனுபவித்தில் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம், செட்டில்மெண்ட்படி அரியதம்பிக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதில் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>12 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

04.03.1965 ஆம் தேதியன்று சர்வே எண்.254 ல் கண்டுள்ள 3 செண்ட் நிலம் அதற்குரிய பட்டா எண்.1999 என்ற பட்டாவின் படி 12 வது பிரதிவாதி பொன்னுசாமிபிள்ளை வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்ற சொன்னால் சரிதான். பட்டா எண்.1999 ன் படி 12 ம்பிரதிவாதி கூட்டுப்பட்டாவில் அவருடைய பெயர் உள்ளது என்ற சொன்னால் சரிதான். உங்கள் வழக்கில் கிரைய ஆவணத்தை ரத்து செய்யக்கோரி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். 13 வது அயிட்ட சொத்துக்களில் மேற்சொன்ன காலைகள் சர்வே எண் வழியாகத்தான் 12 ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட ரயில்வே தண்டவாளங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

**<u>13 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா 11 வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 54 செண்ட் என்று சொன்னால் சரிதான். தாவா 11 வது அயிட்ட சொத்து உங்கள் பாட்டனார் ரெட்டியப்பபிள்ளை வகையரா மற்றும் பொன்னுசாமி பிள்ளை ஆகியோருக்கு சரிபாதி பாத்தியம் என்றால் சரிதான். பொன்னுசாமிபிள்ளைக்கு மெய்கண்டன், பழனிசாமி, கணபதி ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பூமியில் மெய்கண்டன், பழனிசாமி, கணபதி ஆகியோரின் பூமிகள் தென்புறத்திலும் உங்கள் வகையறா பூமி வடபுறத்திலும் உள்ளது என்று சொன்னால் சரிதான். வடபுறத்தில் உள்ள உங்கள் பூமியை உங்கள் தாத்தா இருக்கும் போது கரூரைச் சேர்ந்த ஒருவருக்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். 13 ஆம் பிரதிவாதி அல்ட்ராடெக் தென்புறத்தில் வாங்கிய கிரையம் குறித்து உங்களுக்கு ஆட்சபேனை இல்லை என்றால் சரிதான். 13 ஆம் பிரதிவாதியையும், அவரது சொத்தையும் தேவையின்றி இவ்வழக்கில்

சேர்த்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 13 ஆம் பிரதிவாதி சொத்தை பொறுத்த அளவில் தாவா தள்ளுபடி செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரிதான் ஆட்சேபனை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.09 19:15:13 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.